முருகப்பெருமான் துணை

**மகான் திருவள்ளுவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண  ஜோதியே நமோ நம

**05.03.2024**, செவ்வாய்கிழமை

1. அன்னதான சேவை ஆற்றி
   அகிலத்தின் பசிபிணி விரட்ட
   அன்னதான வள்ளலாக வந்த
   ஆறுமுக அரங்க மகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சோபகிருது சால் திங்கள்
   இனிமைபட இருபானீர் திகதி குசன்வாரம்
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 22 ம் நாள், 05.03.2024, செவ்வாய்கிழமை)
   இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை திருவள்ளுவர் யானும்
   அறமோடு அமைதி பாதுகாப்பு
   வாசிவசம் புனித நிலை
   வையகத்தார் அடைய உரைப்பேன்
4. உரைக்கவே மனித வர்க்கம்
   உண்மைபட பொறிபுலன்வழி
   குறைவின்றி செயல்பாடுகாண
   குருவருள் துணை அவசியம் வேண்டும்
5. வேண்டியே ஞானிகள் திருவடியை
   விடாது பற்றித் தெளிவு தா
   தொண்டுடன் உலக சேமத்துக்கு
   தொடர்சேவை ஆற்றுகின்ற
6. ஆற்றுகின்ற பக்குவமும் திடமும்
   ஆற்றலும் தா என வேண்டி
   உற்றதொரு அரங்க ஞானி
   உண்மை வழியை பற்றி
7. பற்றி பிரணவக் குடிலுக்கு
   பண்புடன் பணிவுடன் வர
   ஆற்றலுடன் ஞானபலமும்
   அறிவுத் தெளிவும் கூடி

8. கூடியே ஞானிகள் ஆசிபட
குருவருள் துணையாக வர
நாடிவரும் ஞான சித்திகள்
நம்பகமுற எல்லா வகையும்
9. வகையும் மாற்றம் கிட்டி
வரமென மனித சமூகத்தை
பகையின்றி பாதுகாப்புமிக்க
பண்பான வழிகாட்டி மீட்க
10. மீட்க உண்டான வேலவன் ஆசி
முழுமைபட கிட்டிச் சிறந்து
ஆட்சி மாற்றமே நிகழ்த்தும்படி
ஆக்கமுடன் சேவை சிறந்து
11. சிறந்துமே கலியுகம் தானும்
சேவையால் ஞானயுகம் ஆகும்
சிறந்துமே ஞான ஆட்சி பெறும்
செப்பிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—